# அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகம் - ஒரு வரலாற்றுப்பார்வை

LIBRARY
08 OCT 2020
EUSL SRI LANKA

பெயர் : செல்வி. உதயகுமார் ஜிஸ்வினி

பதிவு இலக்கம் : EU/IS/2013/AC/43

சுட்டிலக்கம் : CS 5193

FAC 822
Project Report
Library - EUSL

இவ்வாய்வுக் கட்டுரையானது இளங்கலைமாணிச் சிறப்புப் பட்டக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை,

2019.

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# முன்னுரை

கிழக்கிலங்கை மக்கள் அனைவராலும் நன்கு அறியப்பட்டவரும் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கி மக்கள் சேவைக்காக தன்னை கால் நூற்றாண்டிற்கு மேலாக அர்ப்பணித்தவருமான அமரர் கே.டபிள்யூ.தேவநாயகம் கிழக்கு மாகாணத்தின் கல்வித்துறையில் புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்திற்கு காரணகர்த்தாவார். அவரின் பணிகளை ஆவணப்படுத்தும் நோக்கில்: அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகம் : ஒரு வரலாற்றுப்பார்வை என்ற ஆய்வு என்னால் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வழக்கறிஞராகவும் கல்குடாத் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பன்னிரெண்டு வருடங்கள் அமைச்சராகவும் தன்னை அர்பணித்த இவர் மட்டக்களப்பு பிரதேச அபிவிருத்திக்கு உன்னதமான சேவையை ஆற்றியுள்ளதை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவது அவசியமாகும். ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்தாலும் தமிழ்மொழி பேசும் மக்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பாரிய பங்களிப்பு வழங்கியவர்களில் முதன்மையானவர்.

தமிழர்சார் அரசியல் தலைவர்கள் பலர் பேரினவாதக் கட்சிகளில் அங்கத்துவம் பெறுவதை விரும்பாவிட்டாலும் சிறுபான்மை மக்களிடம் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இக்கட்சிகளில் இணைந்து மக்களின் நலன் பேணும் நோக்கில் செயற்பட்ட ஒரு சில அரசியல் தலைவர்களில் குறிப்பிடக்கூடிய அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்த பெருமை இவரைச்சாரும். தனது சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக அக்கறை கொண்ட அரசியல்வாதியாக திகழ்ந்தமை போற்றத்தக்கதாகும்.

கே.டபிள்யூ.தேவநாயகம் அவர்களின் வாழ்க்கை, அரசியற் பிரவேசம், சமூகசேவைகள் மற்றும் அரசியல் பணிகள் தொடர்பான சுருக்கமான ஆவணப்படுத்தலாக ஆய்வினை மேற்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் இத்தகைய சேவைகளை மக்களுக்கு ஆற்றிய மகத்தான தலைவரின் ஒரு பதிவாக இது அமையும் என நம்புகின்றேன்.

ஆய்வாளர்.

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | ii |
| அத்தியாயம் : 01 ஆய்வு அறிமுகம் | 1-8 |
| அத்தியாயம் : 02 கே.டபிள்யூ.தேவநாயகம் வாழ்கையும் இளமைக்காலமும் | 9-22 |
| அத்தியாயம் : 03 கே.டபிள்யூ.தேவநாயகத்தின் சமூகப்பணிகள் | 23-52 |
| அத்தியாயம் : 04 கே.டபிள்யூ.தேவநாயகத்தின் அரசியற்பணிகள் | 53-71 |
| அத்தியாயம் : 05 மதிப்பீடு | 72-77 |
| உசாத்துணை : | 78-82 |
| பின்னிணைப்பு | 83-87 |